திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகள் செல்லும், பேருந்துகள்மீது தாக்குதல் நடத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் கொண்டு வரப் பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால், நாளதுவரையில் இந்தச் சட்டத்தின்படி ஏதாவது வழக்குகள் தொடரப்பட்டிருக் கின்றனவா ? தொடரப்பட்டிருக்குமானால், எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 9 மாவட்டங்களில் ஒட்டு மொத்தமாக இதுகாறும் 54 வழக்குகள் பதிவு செய்யப்பட் டுள்ளன.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982, ஜனவரி 19 ஆம் தேதி ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., ஆகிய இரண்டு சங்கங்களும் இந்தியா முழுவதும் பந்த் நடத்தின. அப்போது எந்தப் பேருந்தும் சேதம் அடைய வில்லை. ஆனால், பல்வேறு போராட்டங்கள் நடத்தும் போது, சொத்துக்கள் சேதம் அடைந்திருக்கின்றன. எந்தெந்தக் கட்சி கள் போராட்டங்கள் நடத்தும்போது, சொத்துக்கள் சேதம் அடைந்தன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட முன்வருவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்கள் இதுபோன்று சொத்துக்களுக்கு சேதம் விளை விக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அரசியல் கட்சிகளின் மீது நடவடிக்கை எடுக்க சாத்தியமில்லை. வன்முறையாளர் கள்மீது, அதாவது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போர், அல்லது உயிருக்கு ஆபத்து விளைவிப்போர்மீது நடவடிக்கை எடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம் இது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

செங்கற்பட்டு மாவட்டத்தில் பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம்

*வினா எண் 305—திரு. எஸ். டி. உக்ம்சந்த் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அமுல் படுத்தப்படுகின்றதா ?

(ஆ) இல்லையெனில், உடனடியாக மேற்படி திட்டம் அமுல்படுத்தப்படுமா ?

1983 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை தமிழகம் முழுவதும் அமுல்படுத்துவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக மொத்தம் 42 வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. படிப் படியாக இந்தத் திட்டம் மேலும் பல பகுதிகளுக்கு விரிவாக்கப் படும்.

இ. எஸ். ஐ. திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம்.

* வினா எண் 306—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி புறநகர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா—

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) எப்பொழுது செயல்படும் ?

(ஈ) எவ்வளவு பேர்கள் பயன் அடைவார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டித்து அங்குள்ள தொழிலாளர்களை நாகர்கோயிலில் ஏற்கனவே இயங்கிவரும் இ.எஸ்.ஐ. மருந்தகத்தோடு இணைத்து அவர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக 5—8—1981 ஆம் நாள் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டம் 25—4—1982 முதல் செயல்பட்டு வருகின்றது.

(ஈ) சுமார் 653 தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன் அடைவார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS